மதுராந்தகம், தாராபுரம் ஆகிய

சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெறவுள்ள மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்பட கீழ்க்கண்ட தேர்தல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

மதுராந்தகம் (தனி) தொகுதி

1. **தா.மோ.அன்பரசன்** (காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்)
2. **க.சுந்தர்** (காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்)

தாராபுரம் (தனி) தொகுதி

1. **மு.பெ.சாமிநாதன்** (கழகத் துணைப் பொதுச்செயலாளர்)
2. **இல.பத்மநாபன்** (திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்)

அருகில் உள்ள கழக மாவட்டத்தினர் பொறுப்பாளர்களுடன் இணைந்து கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அயராது பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 11.09.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்களை கனிமொழி கருணாநிதி எம்.பி. சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தார்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், செப். 12 -

கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (12.09.2026 - சனிக்கிழமை) மாலை 3.00 மணியளவில், காட்டுமன்னார்கோவில், எம்.ஆர்.கே. கலையரங்கத்தில் கழக தேர்தல் பணிக் குழுச் செயலாளர் இள. புகழேந்தி தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் கழக அயலக அணி துணைச் செயலாளர் ப.பரிதி இளம்சுருதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட காட்டுமன்னார்கோவில், சிதம்பரம், புவனகிரி, குறிஞ்சிப்பாடி, கடலூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயற் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. 22.8.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக மறுசீரமைப்பு குறித்து.

2. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தமிழ் அறிஞரும், பட்டிமன்ற நடுவருமான

முனைவர் சாலமன் பாப்பையா மறைவு!

தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு!

மதுரை, செப். 12 - தமிழ் அறிஞரும், பட்டிமன்ற நடுவருமான சாலமன் பாப்பையா அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்கப் பெரிதும் வருந்துகிறோம்.

கடந்த 5ம் தேதி சிவகாசியில் நடந்த சன் டி.வி. சிறப்பு பட்டிமன்றத்தில் நடுவராக பொறுப்பேற்று நடத்தினார். 2 நாட்களாக காய்ச்சல் காரணமாக ஓய்வெடுத்து வந்த நிலையில் நேற்று காலை சாலமன் பாப்பையா அவர்கள் உயிர் பிரிந்தது.

வயது மூப்பு காரணமாக சாலமன் பாப்பையா அவர்கள் மதுரையில் இயற்கை எய்தினார். அவருக்கு வயது 90.

12,000க்கும் மேற்பட்ட பட்டி மன்றங்களை நடத்தியவர் சாலமன் பாப்பையா அவர்கள், கலகலப்பாக பட்டிமன்றங்களை நடத்துவதில் புகழ்பெற்றவர் சாலமன் பாப்பையா அவர்கள்.

அன்பு தாய்மார்களே, அருமை பெரியோர்களோ, இனிய குழந்தைகளே என்றொலிக்கும் கணீர்க் குரலுக்கு சொந்தக்காரர். புராணங்கள், இலக்கியங்களை பேசிக் கொண்டிருந்த பட்டிமன்றங்களில் எளிய மக்களின் வாழ்க்கையை பேச வைத்தவர். 2021ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ விருது உள்பட ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்தும், கழகத் தலைவர் அவர்களிடத்தும் மிகுந்த அன்பு கொண்டு பழகிய பண்பாளர் அவர்.

கலைஞர் பிறந்த நாள் விழா போன்று கழகம் நடத்திடும் பல்வேறு விழாக்களிலும் பங்கேற்று உரை நிகழ்த்திய பெருமைக் குரியவர்.

குறிப்பாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் யாத்த "தொல்காப்பியப் பூங்கா" நூல் வெளியீட்டு விழா சென்னை - அண்ணா அறிவாலயம் 'கலைஞர் அரங்கில்' நடைபெற்றபோது - அவ்விழாவில் பங்கேற்று "தொல்காப்பியப் பூங்கா" நூலின் முதற்படியைப் பெற்றுக் கொண்டு, அந்நூல் குறித்து திறனாய்வுரை நிகழ்த்தி, அவ்விழாவிற்குப் பெருமைச் சேர்த்தார் சாலமன் பாப்பையா அவர்கள்.

எழுத்து, பேச்சு என இலக்கியத்தின் அனைத்து வடிவங்களிலும் ஆளுமைமிக்கவராக விளங்கிய சாலமன் பாப்பையா அவர்களின் மறைவு, தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு எனின் அது மிகையல்ல.

செப்டம்பர்-15 சென்னையில் கழகத்தின் முப்பெரும் விழா!

"திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க.வினர் அணிதிரள்வோம்! ஆர்ப்பரிப்போம் தலைநகர் நோக்கி!" முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, செப். 12 -

செப்டம்பர் 15 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெற வுள்ளது. திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சென்னையை நோக்கி அணித்திரள்வோம், ஆர்ப்பரிப்போம் என்று முன்னாள் அமைச்சரும், கழகத்தின் கொறடாவுமான எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

*கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் **செப்டம்பர் 15**,*

*பண்பாட்டுத் துறையில் பகுத்தறிவு, சமத்துவம், பொருளாதாரத் துறையில் சமதர்மம், அரசியலில் ஜன நாயகம் என்ற கோட்பாட்டுடன், அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற இயக்கமாம், பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் **செப்டம்பர் 16**,*

*பாராட்டி போற்றி வந்த பழமைலோகம், ஈரோட்டு பூகம்பத்தால் இடியுதுபார் என்று தலைவர் கலைஞரால் கொண்டாடப்பட்ட, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் **செப்டம்பர் 17**,*

ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் வழங்கப்படுகிறது.

*இந்த ஆண்டு செப்டம்பர் 15 செவ்வாய் அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. **கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணையை ஏற்று**, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், சென்னை, அண்ணா அறிவாலயம் நோக்கி அணித் திரள்வோம், ஆர்ப்பரிப்போம்.*

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

இராணிப்பேட்டை மாவட்டம் – அரக்கோணம் மேற்கு

ஒன்றியச் செயலாளர் ஆசிரியர் தமிழ்மணி இல்லத் திருமணம்!

மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி நடத்தி வைக்கிறார்!

இராணிப்பேட்டை, செப். 12 -

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆசிரியர் க. தமிழ்மணி - ஜெ.கீதா ஆகியோரின் மகன் தாமரைசெல்வன், கே.கோபி - தேன்மொழி இவர்களின் மகள் கோ. பூஜா திருமணம் நாளை (13.9.2026-ஞாயிற்றுகிழமை) காலை 9 மணிக்கு மேல் திருத்தணி அரக்கோணம் சாலையில் அமைந்துள்ள

கே.எம்.எஸ். திருமண மண்டபத்தில் நடக்கிறது.

திருமணத்தை முன்னாள் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி நடத்தி வைக்கிறார்.

திருமண நிகழ்ச்சியில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், கழக தணிக்கை குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி, மாநில சுற்றுசூழல் அணி துணை செயலாளர் ஆர்.விநோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், திருவள்ளூர் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.சந்திரன், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்டப் பொருளாளர் ஏ.வி. சாரதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.கோபால், முன்னாள் எம்.எல்.ஏ. என்.ஜி. பார்த்தீபன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு. கண்ணையன், அ.அசோகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு தலைமையில், தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி.எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோருடன் ஆலோசனை நடைபெற்றது. உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் எம்.பி., கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி., எஸ்.அம்பேத்குமார் எம்.எல்.ஏ., கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன் ஆகியோர் உள்ளனர்.